DINAMALAR 12-11-2007

# நீரிழிவு நோய் விழிப்புணர்வு மாணவர்களுக்கு ஓவிய போட்டி

வேலூர், நவ. 11-

உலக நீரிழிவு நோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு வேலூர் சிஎம்சி., கல்லூரி மற்றும் ஆஸ்பத்திரி சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை மற்றும் ஓவிய போட்டிகள் ஓட்டல் டார்லிங் ரெசிடென்சியில் நேற்று நடந்தது.

மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களிடம் நீரிழிவு நோய் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்த விழிப்புணர்வினை உண்டாக்கும் விதமாக அகசுரப்பியல் துறை சார்பில் போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளை டாக்டர் செந்தில்வாசன், ரூத்ரூபிமரே மற்றும் துறை ஊழியர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

போட்டியில் வேலூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஆசிரியர்களுக்கான வினாடி-வினா போட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.